# திருவண்ணாமலை சுற்றுலா வழிகாட்டி

- அண்ணாமலையார் திருக்கோயில்
- கிரிவலம்
- கார்த்திகை தீபம்
- திருவண்ணாமலை நகரம்
- ஜவ்வாது மலை–ஜம்னாமத்தூர்
- பர்வத மலை
- சாத்தனூர் அணை
- சின்னையன் பேட்டைக் குளம்
- படவேடு ரேணுகாம்பாள் ஆலயம்
- தென்னாங்கூர் பாண்டுரங்கன் ஆலயம்





போன் : 04175-290280, செல் : 7598408961

# திருவண்ணாமலை சுற்றுலா

திருவண்ணாமலைஎன்பது இந்தியா மட்டுமின்றி வெளிநாட்டினரும் விரும்பி வரும் ஆன்மீக சுற்றுலா இடமாகும். இங்கு அமைந்துள்ள அண்ணாமலையார் திருக்கோயில், திருவண்ணாமலை கிரிவலம், தீபத்திருவிழா மற்றும் இரமண ஆஸ்ரமம் போன்றவை உலக புகழ்பெற்றவைகளாகும்.

## 1. அண்ணாமலையார் திருக்கோயில்

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் என்று அறியப்படும் இத்தலம் சிவபெருமானின் ஐம்பூதத் தலங்களில் அக்னித் தலமாகும். இத்தலத்தின் மூலவர் அருணாசலேசுவர் என்றும், அம்பிகை உண்ணாமுலையால் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.



பிரம்மாவிற்கும், திருமாலுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என சண்டை ஏற்பட்டபோது யார் தன்னுடையஅடியையும்,முடியையும்காணுகிறார்களோ அவர்களே பெரியவர் என்று கூறி சிவபெருமான் நீண்ட நெருப்புத் தண்டாக காட்சியளித்த இடமாகவும், அம்பிகையின் வேண்டுதலுக்காக சிவபெருமான் தன்னுடைய இடபாகத்தினை அளித்த இடமாகவும் இத்தலம் போற்றப்படுகிறது. இம்மலையானது சிவபெருமானே என்று சைவர்கள் நம்புவதால் இம்மலையை வலம் வருதலை கடைபிடிக்கின்றனர்.



அருணாசலேஸ்வரர் கோயில் பெரிய மலைக்கு நடுவே மொத்தம் ஆறு பிரகாரங்களும், ஒன்பது கோபுரங்களுடனும் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. கோவிலின் உள்ளே நுழைவதற்கு நான்கு கோபுரங்களும், கோவிலின் உள்ளே ஐந்து கோபுரங்களும் உள்ளன. கோவிலின் பிரதான கோபுரமான கிழக்கு கோபுரம் 217 அடி உயரமும், 11 அடுக்குகளையும் கொண்டது. இக்கோயிலில் பிரம்ம தீர்த்தம் மற்றும் சிவகங்கா தீர்த்தம் என இரண்டு தெப்பகுளங்கள் உள்ளது. மேலும் இங்கு ஓர் பிரம்மாண்டமான ஆயிரம் தூண்கள் கொண்ட அழகான மண்டபம் உள்ளது.




கோவில் திறந்திருக்கும் நேரம் காலை 5 மணி முதல் மதியம் 12.30 மணி வரை மற்றும் மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை.



## 2. கிரிவலம்

திருவண்ணாமலையில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று பல லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருகிறார்கள். பௌர்ணமியன்று திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையாரை தரிசித்து விட்டு 14 கிலோ மீட்டர் தூரம் உள்ள மலையை வலபக்கத்தில் தொடங்கி சுற்றி கிரிவலம் சென்றால் பாவங்கள் தீரும், புண்ணியம் சேரும் என்பது ஐதீகம்.




இங்கு உள்ள 2668 அடி உயர மலையானது லிங்கம் போல் காட்சி தருகிறது. மேலும் பௌர்ணமி நாட்களில் நிலவின் ஒளி மலையில் இருக்கும் மூலிகைச் செடிகளின் மீது பட்டு பிரதிபலிக்கும். அப்படி பிரதிபலிக்கும் ஒளிக்கதிர்கள் நம் உடலுக்கும் உள்ளத்திற்கும் நன்மை பயக்கும் என்பது அறிவியல் கருத்தாகும்.




14 கி.மீ நீளமுடைய கிரிவலப் பாதையில் இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யம லிங்கம், நிருத்தி லிங்கம், வருண லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம், ஈசான்ய லிங்கம் ஆகிய எட்டு லிங்கங்கள் எட்டுத் திசைகளிலும் உள்ளன. இரவில் மலையை கிரிவலம் செல்ல பாதை முழுவதும் விளக்குகள் உள்ளன.

கிரிவலப் பாதையில் மிகச்சிறிய பழமையான இடுக்குப் பிள்ளையார் ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. இக்கோவிலில் நேர்கோட்டில் அமையாத நிலையில் மூன்று வாயில்கள் உள்ளன. பின்வாசல் வழியாக நுழைந்து, ஒருக்களித்து படுத்தவாறு வளைந்து தவழ்ந்து, இரண்டாவது வாயிலில் நுழைந்து, முன்வாசல் வழியாக வெளிவந்து பிள்ளையாரை வழிபட்டால் குழந்தை வரம் கிடைக்கும் என்பது ஐதீகம்.




கிரிவலம் வரும்போது மிகவும் மெல்ல நடக்க வேண்டும். இறை சிந்தனையோடும், நாம ஜபத்தோடும் நடக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வாகனத்தில் அமர்ந்து கிரிப் பிரதட்சிணம் செய்யக் கூடாது.




கிரிவலம் செல்வதால் மனஅழுத்தம் குறையும். அக்குபஞ்சர் முறையில் காலில் சிறு கற்கள் குத்துவதால் இரத்த ஓட்டம் சீராக அமையும். ஆண்கள் கிரிவலம் செல்லும் போது சட்டை அணியாமல் செல்ல வேண்டும். சந்திரனின் ஒளிக்கதிர்கள் உடலில் படுவதால் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. மலையை வலம் வர மனது விரியும், நடந்து வழிபட தேக நலனும் கூடும், நாலு பேரோடு நடக்க நல்லுறவும் பெருகும். இறைவனை பணிய, அவனடியவரை நினைக்க அமைதியும் கூடும், அக ஒளியும் பெருகும்.



## 3. கார்த்திகை தீபம்

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் சிவன் கார்த்திகை மாத கிருத்திகை நட்சத்திரத்தில் திருமால் மற்றும் பிரம்மன் இருவருக்கும் அக்னி வடிவமாக காட்சி தந்ததை அடிப்படையாக கொண்டு கார்த்திகை தீபத் திருவிழா ஆண்டுதோறும் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது.



அன்று அதிகாலையில் அண்ணாமலையார் சன்னதியில் ஒரு தீபம் ஏற்றி, அதன் மூலம் மேலும் ஐந்து தீபங்கள் ஏற்றி பூஜிப்பர். பின்பு அந்த தீபங்களை ஒன்றாக்கி அண்ணாமலையார் அருகில் வைத்து விடுவர். பின்பு இந்த தீபத்தை மலைக்கு கொண்டு சென்று விடுவர். இந்த திருவிழா கார்த்திகை பிரம்மோட்சவம் அல்லது தீபத் திருவிழா என்று பத்து நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.




மகாதீபம் ஏற்றுவதற்காக மலையின் உச்சியில் ஐந்தரை அடி உயர கொப்பரையில் 600 லிட்டர் நெய்யும், 2 மூட்டை பஞ்சும், 15 மீட்டர் காடா துணியும், இரண்டு கிலோ கற்பூரமும் பயன்படுத்தப்பட்டு அகண்ட தீபம் ஏற்றப்பட்டு தொடர்ந்து 11 நாட்களுக்கு பிரகாசிக்கும்.

10 நாட்கள் கார்த்திகை தீபத் திருவிழாவில் முதல் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கி அருணாச்சலேஸ்வரர் வெள்ளி வாகன ஊர்வலம் நடைபெறும்.



இரண்டாம் நாளில் சந்திரசேகர பெருமான் மற்றும் பெரியநாயகர் பெருமான் ஊர்வலமும், மூன்றாம் நாளில் பெரியநாயகர் பெருமான் சிம்ம வாகன ஊர்வலமும் நடைபெறும்.

நான்காம் நாளில் பெரியநாயகர் பெருமானின் காமதேனு ஊர்வலமும், ஐந்தாம் நாளில் பெரியநாயகர் பெருமானின் ரிஷப வாகன ஊர்வலமும் நடைபெறும்.



ஆறாம் நாளில் பெரியநாயகர் வெள்ளி வாகன ஊர்வலமும், ஏழாம் நாளில் பெரியநாயகர் பெருமானின் மரத்தேர் ஊர்வலமும் நடைபெறும்.

எட்டாம் நாளில் பெரியநாயகர் பெருமானின் குதிரை வாகன ஊர்வலமும், ஒன்பதாம் நாளில் பெரியநாயகர் கைலாச வாகன ஊர்வலம் நடைபெறும்.



கார்த்திகை தீப திருவிழாவின் பத்தாம் நாள் அதிகாலை நான்கு மணிக்கு கோயிலில் பரணி தீபம் ஏற்றப்படும். மாலை ஆறு மணியளவில் மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படும். இத்தீபம் அருணாச்சலேஸ்வரரின் உருவத்தை குறிப்பதால் உலகம் எங்கும் உள்ள பக்தர்கள் இக்காட்சியை காண்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இரவில் திருவண்ணாமலை மலைமீது எரியும் மகாதீபத்தை திருவண்ணாமலையை சுற்றி 30 கிலோமீட்டர் தொலைவு வரை காணலாம்.



கார்த்திகை தீப திருவிழாவின் பதினொன்றாம் நாள் அருணாச்சலேஸ்வரர் தெப்ப குளத்தில் தெப்பத்தில் வலம் வரும் தெப்பத்திருவிழாவும், பன்னிரெண்டாம் நாள் கார்த்திகை தீப திருவிழாவில் கிரிவலம் வருவதுடன் கார்த்திகை தீபவிழா இனிதே முடிவடைகிறது.

# சுற்றுலா பயணிகள் திருவண்ணாமலை மாவட்டத்தில் காண வேண்டிய சுற்றுலா மற்றும் ஆன்மீக தலங்கள்

## 4. திருவண்ணாமலை நகரம்

முக்தி தரும் தலங்களில் திருவண்ணாமலை என்பது நினைத்தாலே முக்தி தரும் என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். இதனால் இங்குள்ள அருணாச்சலேஸ்வரர் கோயில் இந்தியா மட்டுமின்றி வெளிநாட்டு பக்தர்களையும் கவர்ந்து இழுக்கிறது.

மேலும் முற்காலங்களில் பல்வேறு நகரங்களிலிருந்தும், ஊர்களிலிருந்தும் எண்ணற்ற சித்தர்கள் திருவண்ணாமலை நகருக்கு வந்து வாழ்ந்து சமாதியடைந்துள்ளார்கள். அவர்களில் ரமணர், சேஷாத்திரி சுவாமிகள், விசிறி சுவாமிகள், குரு நமச்சிவாயர், குகை நமச்சிவாயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் சமாதிகள் கிரிவலப் பாதையில் அமைந்துள்ளன.




காஞ்சிபுரத்தில் 1870ம் ஆண்டு பிறந்த சேஷாத்ரி ஸ்வாமிகள் ரமண மகரிஷி வரும் முன்னரே திருவண்ணாமலை வந்தடைந்தார். இவர் ரமண மகரிஷியின் அண்ணன் என்று




அழைக்கப்படுகிறார். அவருடைய ஆசிரமம் செங்கம் சாலையில் ரமணமகரிஷியின் ஆசிரமம் அருகில் அமைந்துள்ளது.

திருவண்ணாமலை நகரத்துக்கு வெளியே இருந்து வரும் பக்தர்களுக்கு தங்கும் வசதியை சேஷாத்ரி ஆசிரமம் அளிக்கிறது.

ஆன்மீகத்தை பொருத்தவரை உலக அளவில் திருவண்ணாமலையில் வாழ்ந்த ரமண மகரிஷி மிகவும் பிரபலமானவர். இவர் மதுரை அருகில் ஒரு கிராமத்தில் 1879ம் ஆண்டு பிறந்து 1950 ல் திருவண்ணாமலையில் சமாதியானார்.



ரமண மகரிஷி இறந்த பின்பும் அவருடைய சிந்தனைகள் மற்றும் ஆன்மீக சக்தியால் பக்தர்களிடையே அவர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். ரமண ஆசிரமத்தின் உள்ளே இங்கு வரும் பக்தர்கள் அனைவரும் அமர்ந்து சௌகரியமாக தியானம் செய்ய வசதியாக ரமண மகரிஷியின் சமாதி மீது ஒரு பெரிய தியான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

யோகி ராம்சுரத்குமார் காசியில் 1918ம் ஆண்டு பிறந்து 2001 வரை திருவண்ணாமலையில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். ரமண ஆசிரமம் எதிரில் அமைந்துள்ள யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் தாமரை வடிவில் உள்ளது. தினமும் மூன்று வேளையும் இங்கு அன்னதானம் நடைபெறுகிறது.





## 5. ஜவ்வாது மலை–ஜம்னாமத்தூர்

ஜவ்வாது மலையின் மைய பகுதியும் சுற்றுலா தலமுமான ஜம்னாமத்தூர் திருவண்ணாமலையில் இருந்து போளூர் வழியில் 70 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.



ஜம்னாமத்தூரிலிருந்து 3 கி.மீ தொலைவில் ஆண்டின் மழைகாலத்தில் மட்டும் 6 மாதங்கள் 80 அடி உயரத்தில் இருந்து நீர் கொட்டும் பீமன் நீர் வீழ்ச்சி அமைந்துள்ளது.





மேலும் ஜம்னாமத்தூரிலிருந்து 15 கி.மீ தூரத்தில் காவனூரில் தெற்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய விண்வெளி ஆராய்ச்சி மையமான தொலைநோக்கி மையம் அமைந்துள்ளது. இங்கு வாரத்தில் சனிக்கிழமை மாலை 4 முதல் 6 மணி வரை மட்டும் பார்வையாளர்கள் பார்வையிட அனுமதிக்கப்படுகிறார்கள்.



போளூரிலிருந்து அத்தியூர் வழியில் சுமார் 38 கிலோ மீட்டர் தொலைவில் சுமார் 2,500 அடி உயரத்தில் மலைமீது வாலியம் பாறை என்ற இடம் உள்ளது. இங்கு முற்காலத்தில் 3 அடி உயரமுள்ள மனிதர்கள் வாழ்ந்ததாக சொல்லப்படும் 4 அடி உயரமே உடைய குள்ளர் குகைகள் எனப்படும் குகைகள் நூற்று கணக்கில் கொத்து கொத்தாக அமைந்துள்ளன.



## 6. பர்வத மலை

திருவண்ணாமலையில் இருந்து போளூர் வழியாக 57 கிலோமீட்டர் தொலைவில், தென்மாதிமங்கலத்தில் 4,500 அடி உயரத்தில் பர்வத மலை அமைந்துள்ளது. இதன் உச்சியில் மல்லிகார்ஜுனர், பிரமராம்பிகை அம்மன் கோவில்கள் உள்ளன. ஆகாய உயரத்தில் இருக்கும் இந்த மலை உச்சிக்கு சென்று கடவுளை தரிசிக்க வேண்டும் என்றால், உயிரையே பணயம் வைத்துதான் செல்லவேண்டும்.

மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது 50 கி.மீ. வரை கீழே உள்ள இயற்கை அழகை கண்டு இரசிக்கலாம். இந்த மலையில் உள்ள சுமார் 1,250 படிகளை ஏற 1 மணி முதல் 4 மணி நேரம் வரை ஆகும்.



கரடுமுரடான, கற்கள் நிறைந்த மலைப் பாதையில் கடப்பாரைப் படி ஆரம்பிக்கும் இடங்கள் 120 டிகிரி சாய்வாக இருக்கும். இதில் பாறையில் துளை போட்டு கடப்பாறைகளை நட்டு அவற்றை சங்கிலிகளால் பிணைத்திருப்பார்கள். இந்த சங்கிலிகளைப் பிடித்துக் கொண்டுதான் மலை மீது ஏற வேண்டும். இந்த மலை பாதை முதல் சில கிலோமீட்டர்கள் தொலைவு சமதள பரப்பாகவும், இரண்டாவது சில கிலோமீட்டர்கள் படிப் பாதையாகவும், மூன்றாவது சில கிலோமீட்டர்கள் தொலைவு மலைப்பாறை பாதையாகவும் மற்றும் நான்காவது கடப்பாரை பாதையாகவும் உள்ளது. பர்வத மலை மீது சென்று வந்த பிறகு குறைந்தது 2 நாட்களுக்கு கால்வலி இருக்கும். சாகசம் விரும்புபவர்களுக்கு இது ஏற்ற இடமாகும்.



## 7. சாத்தனூர் அணை

திருவண்ணாமலை நகரத்திலிருந்து தண்டராம்பட்டை தாண்டி 30 கி.மீ தொலைவில் சாத்தனூர் அணை அமைந்துள்ளது. அணையில் படகு சவாரி வசதி, பேட்டரி கார் வசதி மற்றும் குளித்து மகிழ நீச்சல் குளம் உள்ளது, 50 ஏக்கர் பரப்பளவில் பூங்கா மற்றும் 300 முதலைகளுடன் மிகப்பெரிய முதலைப் பண்ணையும் இங்கு அமைந்துள்ளன.





## 8. சின்னையன் பேட்டைக் குளம்

திருவண்ணாமலையில் இருந்து தானிப்பாடி வழியில் 30 கிலோ மீட்டர் தொலைவில் சின்னையன் பேட்டை என்னும் சிற்றூரில் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் பாலியல் சிற்பங்களுக்கு புகழ் பெற்ற சின்னையன் பேட்டைக் குளம் அமைந்துள்ளது. இக்குளத்தில் விதவிதமான பாலியல் உறவுகளை விளக்கும் சிற்பங்கள் நிறைந்துள்ளன.



## 9. படவேடு ரேணுகாம்பாள் ஆலயம்

திருவண்ணாமலையிலிருந்து 57 கிலோ மீட்டர் தொலைவில் வேலூர் சாலையில் சந்தவாசலை அடுத்து படவேடு உள்ளது. இங்குள்ள ரேணுகாம்பாள் திருகோயில் அம்மன் தலங்களில் பிரசித்தி பெற்றதாகும்.



## 10. தென்னாங்கூர் பாண்டுரங்கன் ஆலயம்

வந்தவாசியிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் தென்னாங்கூரில் பாண்டுரங்கர் கோவில் அமைந்துள்ளது. இது பூரி ஜகன்னாதர் கோவிலை போன்று 120 அடி உயர கோபுரத்தை கொண்டு பார்ப்பவரை பிரமிக்க வைக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் பைபர் கிளாசில் அழகிய வண்ண ஓவியங்களாக கண்ணனின் லீலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய வேலைப்பாடு நிறைந்த ஆலயங்களில் உலகிலேயே மூன்றாவதும், பெரியதுமான ஆலயம் இதுவாகும்.



இவற்றை தவிர சென்னை சாலையில் 30 கி.மீ. தொலைவில் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள செஞ்சிக்கோட்டை மற்றும் அவலூர்பேட்டை சாலையில் 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி கோயில், வேலூர் சாலையில் 60 கி.மீ. தொலைவில் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அமிர்தி சுற்றுலா தலம், வேலூரில் அமைந்துள்ள பொற்கோயில் போன்றவையும் பார்க்க வேண்டிய சுற்றுலா இடங்களாகும்.

யுனிவர்சல் ரெசிடென்ஸி-திருவண்ணாமலை

# திருவண்ணாமலையில் தங்கி இளைப்பாரிட...




## ...வசதிகள்...

- மைய பேருந்து நிலையம் அருகாமையில்.
- இரயில் நிலையத்திலிருந்து நடைபயண தொலைவில்.
- கிரிவல பாதை அருகில்.
- தேசிய நெடுஞ்சாலை NH47 -ல்.
- 100 சீட் A/c பார்ட்டி ஹால்.
- 50 சீட் A/c மினி ஹால்.
- டிராவல்ஸ் வசதி.
- ஸ்டேண்டர்டு, டீலக்ஸ் & சூட் அறைகள்.
- A/c மற்றும் Non A/c அறைகள்.
- சுத்திகரிக்கப்பட்ட RO மற்றும் குளிர் குடிநீர் வசதி.
- அனைத்து அறைகளிலும் வென்னீர் வசதி.

## யுனிவர்சல் ரெசிடென்ஸி(லாட்ஜ்)

10/1, வானகார தெரு,
(மைய பேருந்து நிலைய ரவுண்டானா அருகில்)
திருவண்ணாமலை-606601.
போன் : 04175-290280, செல் : 7598408961
www.universalresidency.com

போன் : 04175-290280, செல் : 7598408961


Reception
Tiruvannamalai District Tourist Places
Paruvatha Hills
Javadhu Hills


Suite Room


Deluxe Room


Standard Room












# கிரிவல காலண்டர்

## அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை

## 2022-23-ஆம் ஆண்டு (சுபகிருது ஆண்டு) கிரிவல நாட்கள் விபரம்

| தமிழ் மாதம் | ஆங்கில மாதம் | தேதி | கிழமை | கிரிவலம் ஆரம்பம் முடிவு | கிரிவலம் வரும் நாள் |
|---|---|---|---|---|---|
| ஆடி 26,27 | ஆகஸ்டு | 11-8-22<br>12-8-22 | வியாழன்<br>வெள்ளி | காலை 10.16 முதல்<br>காலை 8.00 வரை | 11-08-22 வியாழன் |
| ஆவணி 24,25 | செப்டம்பர் | 09-9-22<br>10-9-22 | வெள்ளி<br>சனி | மாலை 6.17முதல்<br>மாலை 4.33 வரை | 09-09-22 வெள்ளி |
| புரட்டாசி 21,22 | அக்டோபர் | 8-10-22<br>9-10-22 | சனி<br>ஞாயிறு | பி.இரவு 4.06 முதல்<br>பி.இரவு 3.09 வரை | 09-10-22 ஞாயிறு |
| ஐப்பசி 21,22 | நவம்பர் | 7-11-22<br>8-11-22 | திங்கள்<br>செவ்வாய் | மாலை 4.44 முதல்<br>மாலை 4.48 வரை | 07-11-22 திங்கள் |
| கார்த்திகை 21,22 | டிசம்பர் | 7-12-22<br>8-12-22 | புதன்<br>வியாழன் | காலை 8.14 முதல்<br>காலை 9.22 வரை | 07-12-22 புதன் |
| மார்கழி 21,22 | ஜனவரி | 5-01-23<br>6-01-23 | வியாழன்<br>வெள்ளி | பி.இரவு 2.26 முதல்<br>பி.இரவு 4.20 வரை | 06-01-23 வெள்ளி |
| தை 21,22 | பிப்ரவரி | 4-02-23<br>5-02-23 | சனி<br>ஞாயிறு | இரவு 10.03 முதல்<br>இரவு 12.10 வரை | 05-02-23 ஞாயிறு |
| மாசி 22,23 | மார்ச் | 6-03-23<br>7-03-23 | திங்கள்<br>செவ்வாய் | மாலை 5.08 முதல்<br>மாலை 6.45 வரை | 06-03-23 திங்கள் |
| பங்குனி 22,23 | ஏப்ரல் | 5-04-23<br>6-04-23 | புதன்<br>வியாழன் | காலை 10.04 முதல்<br>காலை 10.44 வரை | 05-04-23 புதன் |